நோர்வே தமிழர் சுகாதார அமைப்பு
Norsk tamilsk helseorganisasjon
Norwegian Tamil Health Organisation

# நோர்வே பொதுசுகாதார நிறுவனத்தின் (FHI) கொறோனாத் தடுப்பூசி நிகழ்வுத்திட்டப் புதுப்பிக்கப்பட்ட தகவல்கள்

ஜூலை 2022

## மூத்தோருக்கும் வயோதிபர் காப்பகங்களில் வசிப்போருக்கும் நிர்ப்பீடனப் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசி வழங்கல்

75 வயதிற்கு மேற்பட்டவர்களை கொறோனாவிற்கான புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியைப் (oppfriskningsdose) பெற்றுக் கொள்ளுமாறு நோர்வே பொதுசுகாதார நிறுவனம் (FHI) பரிந்துரைக்கிறது. வயோதிபர் காப்பகங்களில் வசிப்போருக்கும் மற்றும் 80 வயதுக்கும் அதிகமானோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ஓமிக்குரோன் BA.5 என்ற புதிய கொறோனா துணைவகையின் தொற்று நோர்வேயில் ஏனைய வகைகளையும்விட அதிகமாகவும் விரைவாகவும் பரவிவருகிறது. அதிகமான அளவில் 75 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூன்றாம் தடுப்பூசியைப் போட்டிருந்தும் கொறோனாத் தொற்றின் பாதிப்பினால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவேதான் 75 வயதிற்கும் அதிகமானவர்கள் இத்தடுப்பூசிகளை புத்துயிர்ப்பாக்கியாகப் (நான்காவது) பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

ஜூலை முதலாம் திகதியிலிருந்து கீழ்க்காணும் வரிசையின் அடிப்படையில் தடுப்பூசிகளை வழங்குமாறு நகராட்சிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

1. வயோதிபர் காப்பகங்களில் வசிப்போர் மற்றும் 75 வயதிற்கு மேற்பட்ட (சுகாதார) உதவிகளை உடல்நலம் குன்றியகாரணத்தால் வீட்டில் பெறுவோர்.
2. 80 வயதும் அதற்கு மேற்பட்டோரும்
3. 75 ற்கும் 79 ற்கும் இடைப்பட்ட வயதுடையோர்

மேலும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து 65-74 வயதுடையோருக்கும் 18 முதல் 64 வயதுள்ளவர்களில் நோயெதிர்ப்புச்சக்தி குறைக்கும் வியாதிகளுக்கு உட்பட்டோருக்கும் தடுப்பூசிகளை வழங்க ஆயத்தமாகுமாறு நகராட்சிகளுக்கு FHI அறிவுறுத்தியுள்ளது.

75 வயதுக்கு கூடியவர்கள் கொறோனாத் தொற்றுக்கு (கோவிட்-19) அண்மையில் உட்பட்டு இருந்தாலும் புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசியை 3 வாரங்களின் பின்னர் பெற்றுக்கொள்ளுமாறு கூறப்படுகிறது.

இறுதியாகப் பெற்றுக்கொண்ட கொறோனாத் தடுப்பூசிக்கும் புதிய புத்துயிர்ப்பாக்கித் தடுப்பூசிக்கும் இடையே குறைந்தது 4 மாத இடைவெளி இருக்கவேண்டும்.

https://www.fhi.no/nyheter/2022/eldre-og-sykehjemsbeboere-anbefales-ny-oppfriskningsdose/